நாள்: 03.07.2026
OS. 168/2021
பெயர் பிரியா
வா.சா.1

<u>குறுக்கு விசாரணை</u> (1ம் பிரதிவாதி தரப்பு)

நான் வருஷநாட்டில் குடியிருந்து வருகிறேன். என் தந்தை கந்தசாமிக்கு ஓடைப்பட்டி தான் பூர்வீகம் என்றால் சரிதான். அவர் கவுடர் சமுதாயத்தை சேர்ந்தவர். என் தகப்பானர் நல்லகவுடர்கூட்டு குல வகையறாவை சார்ந்தவர்கள். என் தந்தை வழியில் எத்தனை தலைக்கட்டு உள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. ஓடைப்பட்டியில் திருவிழா நடைபெறும் போது என் தந்தை தலைக்கட்டு வரி செலுத்தி திருவிழாவில் கலந்து கொள்வார் என்றால் சிலசமயம் வரி செலுத்துவார், சில சமயம் வருவார், சில சமயம் வரமாட்டார். எங்கள் ஊரில் இறந்தவர்களுக்கு ஈமகரி மொய் என் தந்தை செய்வார் என்றால் சரியல்ல. என் தந்தை சென்னையில் இருந்தார். என் தாத்தா பாட்டி தான் செய்து வந்தார்கள். ஊருக்கு வந்து தான் என் தந்தை கொடுப்பார். என் தந்தையுடன் பிறந்த 4 சகோதரர்கள் ஓடைப்பட்டியில் இருக்கிறார் என்றால் சரியல்ல. பிழைப்புக்காக அவர்கள் வெளியூரில் உள்ளனர். அவ்வப்போது வந்து செல்வார்கள்.

வழக்கு சொத்து என் தந்தைக்கு பாத்தியப்பட்ட பூர்விக சொத்து என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் தந்தை அனுபவித்து வந்த சொத்து ஆகும். ஆரம்ப காலத்தில் ஜமீன் பைமாஸ் எண். 1134/A/பா என அதில் 1 ஏக்கர் 11 செண்ட் இருந்தது என்றால் சரிதான். மேற்படி சொத்து கணக்கு ராமகவுடர் பெயரில் பதிவாகியிருந்தது என்றால் சரிதான். அவருடைய மகன் சுப்பிரமணி என்றால் சரிதான். சுப்பிரமணி வழக்குரை சொத்தை பொன்னையா என்பவருக்கு வாய்மொழி கிரையம் கொடுத்தார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. பொன்னையா வழக்குரை சொத்தில் மேற்கே உள்ள பகுதியை 18.05.1991ம் தேதியில் 1ம் பிரதிவாதி சுருளியப்பனுக்கு வாய்மொழியாக கிரையம் கொடுத்தார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அந்த வாய் மொழி கிரையத்தின் அடிப்படையில் 02.11.1996 ல் ஓடைப்பட்டி பேரூராட்சியில் கட்டிட வரைபட அனுமதி பெற்று வீடு கட்டியுள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

அன்றைய தேதியிலிருந்து, இன்று வரை அவர் பெயரில் தான் வீட்டு வரி ரசீது தொடர்ந்து வரி செலுத்தி அனுபவித்து வருகிறார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. என் தந்தை 11-9-16/13 என்ற வீட்டில் குடியிருந்து வந்தார் என்றால் சரியல்ல. நாங்கள் சென்னையில் தான் குடியிருந்தோம். ஓடைப்பட்டி வந்தால் நான் என் தாய் வழி பாட்டி வீட்டில் தங்குவோம். 1995 ல் பட்டா வாங்கியதாக சொல்லியுள்ள நிலையில் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் என் தாத்தாவிடம் உள்ளது. நான் நகல் எடுத்து தாக்கல் செய்துள்ளேன். 1991லிருந்து இன்றுவரை சுருளியப்பன் தான் வழக்கு சொத்தில் குடியிருந்து வருகிறார் என்றும்,

சுருளியப்பனுக்கு வரவேண்டிய பட்டாவை என் தந்தை தான் அவர் செல்வாக்கை பயன்படுத்தி அவர் பெயர் பட்டா பெற்றுள்ளார் என்றால் சரியல்ல.

வழக்குரை சொத்தில் கிழக்கு பகுதி சுப்பரமணி, ராஜேந்திரன் என்பவருக்கு வாய் மொழியாக விற்பனை செய்து, ராஜேந்திரன் பொன்னையா என்பவருக்கு வாய் மொழியாக விற்பனை செய்து, பொன்னையா 2 ம் பிரதிவாதிக்கு வாய் மொழி கிரையமாக கொடுத்துவிட்டார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அதன்பின்னர் 27.11.2003 ம் தேதி 2 ம் பிரதிவாதி, 3 ம் பிரதிவாதிக்கு தானமாக எழுதி பதிவு செய்துக்கொடுத்துவிட்டார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. தான பத்திரத்தின் அடிப்படையில் 3 ம் பிரதிவாதி, 1 ம் பிரதிவாதிக்கு 11.03.2019 ம் தேதி கிரையம் எழுதிக்கொடுத்துவிட்டார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நகல் எடுத்து பார்த்தபின்னர் தான் தெரியும். அந்த கிரையத்தின் அடிப்படையில் தான் வழக்கு சொத்தின் கீழ்புறம் கார்செட் அமைத்து அனுபவித்து வருகிறார் என்றால் எனக்கு பத்திரம் முடித்து தந்த பின்னர் தான் 25.07.2019 ல் தாவா சொத்திற்கு சென்ற போது தான் எனக்கு அந்த விவரம் தெரியும். 2019 ல் என் தகப்பனார் அவர் செல்வாக்கை பயன்படுத்தி மோசடியாக பட்டா பெற்று எனக்கும், என் தாயாருக்கும் தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. பட்டாவின் அடிப்படையில் என் தந்தை எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.6 ,7 ,8 தான செட்டில் ஆவணம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. வழக்குரை சொத்தை 1991 ம் தேதியிலிருந்து 1 ம் பிரதிவாதி தான் தொடர்ந்து அனுபவித்து வருகிறார் என்றும், என் தந்தைக்கு எந்த உரிமையும், அனுபவமும் கிடையாது என்றால் சரியல்ல. என் தந்தைக்கு சொத்து எப்படி பாத்தியப்பட்டது என்பதை காடடக்கூடிய மூல ஆவணத்தை பிராதில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதனால் என் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

M SHIVAJI CHELLIAH
Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.07.03 17:36:11 +0530

சார்பு நீதிபதி
உத்தமபாளையம்